சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய னடஞ்செயு மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமக ளினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயவருக
நீறிடும் வேலவ னித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவசரஹ வீராநமோநமோ
நிபவசரஹண நிறநிறநிறென
வசரஹணப வருக வருக
அசுரர்குடிகெடுத்த ஐயாவருக
என்னையாளும் இளையோன்கையிற்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்தவிழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக்காக்க வேலோன்வருக
ஐயுங்கிலியும் அடைவுடன்சௌவும்
உய்யொளிசௌவும் உயிரையுங்கிலியும்
கிலியுஞ்சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தமுமொளிரும்
சண்முகன் றீயும் தனியொளிவொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன்றினம்வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிருகண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியி னவமணிச் சுட்டியும்
ஈராறுசெவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகியமார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ந மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்நம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலிமுழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்குடிங் குகுகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவி நோதனென்
றுன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிருவிழியால் மாலனைக்காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைகாக்க
விதிசெவியிரண்டு வேலவர்காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டு முரண்வேல் காக்க

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமல நல்வேல் காக்க
முப்பா ளுடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் மெனை எதிர்வேல்காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூத ரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து யரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுகன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக்கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேள் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழனிப்பதி வாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
என்னைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியி லணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன்பகர்ந் ததைக்
காலையின் மாலையிற் கருத்துட னாளும்
ஆசாரத் துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாண் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித் துகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலேங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத் தடி
அறிந்தென் துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ள
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹணா பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்

கந்தர்சஷ்டிகவசம் முற்றிற்று.

கருணைமாலை.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சங்கபாணியைச்சதுமுகத்தனைச்
செங்கணாயிரத்தேவர்நாதனை
மங்கலம்பெறவைத்தவள்ளலே
தங்கருட்டிருத்தணிகையையனே. 1

ஐய்யனேநினையன்றியெங்கணும்
பொய்யனேற்கொருபுகலிலாமையால்
வெய்யனேனெனவெறுத்துவிட்டிடேல்
மெய்யனேதிருத்தணிகைவேலனே. 2

வேலன்மாதவன்வேதனேத்திடும்
வேலன்மாமயின்மேலனன்பருட்
சாலநின்றவன்தணிகைநாயகன்
வாலநற்பதவைப்பனெஞ்சமே. 3

நெஞ்சமேயிஃதென்னைநின்மதி
வஞ்சவாழ்வினின்மயங்குகின்றதை
தஞ்சமென்றருட்டணிகைசார்தியேற்
கஞ்சமாமலக்கழல்கிடைக்குமே. 4

கிடைக்குண்மாழ்கியேகிலஞ்செயந்தகன்
படைக்குட்பட்டிடும்பான்மையெய்திடேன்
றடைக்குட்பட்டிடாத்தணிகையான்பதத்
தடைக்கலம்புகுந்தருள்செழிப்பனே. 5

செழிக்குஞ்சீர்த்திருத்தணிகைத்தேவநின்
கொழிக்குநல்லருள்கொள்ளைகொள்ளவே
தழிக்கொண்டன்பரைச்சாத்திலேனிவண்
பழிக்குள்ளாகுமென்பான்மையென்னையோ. 6

என்னையென்னையீதென்றன்மாதவ
முன்னைநன்னெறிமுயன்றிலேனைநின்
பொன்னையன்னதாள்போற்றவைத்தனை
யன்னையென்னுநற்றணிகையண்ணலே. 7

அண்ணிலேனினையையநின்னடி
யெண்ணிலேனிதற்கியாதுசெய்குவேன்
புண்ணினேன்பிழைபொருத்துக்கோடியா
றண்ணிணீள்பொழிற்றணிகையப்பனே. 8
அப்பனென்னுடையன்னைதேசிகன்
செப்பனென்குலத்தெய்வமானவன்
றுப்பனென்னுயிர்த்துணைவன்யாதுமோர்
தப்பிலன்பர்சேர்தணிகைவள்ளலே. 9
வள்ளலுன்னடிவணங்கிப்போற்றவென்
னுள்ளமென்வசத்துற்றதில்லையா
வெள்ளலையவோவேழையென்செய்கேன்
றள்ளரும்பொழிற்றணிகைவெற்பனே. 10
வெற்பனேதிருத்தணிகைவேலனே
பொற்பனேதிருப்போரிநாதனே
கற்பமேற்பலகாலஞ்செல்லுமா
லற்பனேன்றுயர்க்களவுசாற்றவே. 11
சாறுசேர்திருத்தணிகையெந்தைநின்
ஆறுமாமுகத்தழகைமொண்டு
டுறில்கண்கலாவுண்ணவெண்ணினே
னீறிலென்னுடையெண்ணமுற்றுமோ. 12
திருச்சிற்றம்பலம்.

ஆற்றாவிரக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தணிகைமலையைச்சாரேனோசாமியழகைப்பாரேனோ
பிணிகையறையப்பேரேனோபேராவன்புகூரேனோ
வணிசெயருணீரரேனோவாறுத்தாகந்தீரேனோ
பணிசெய்தொழும்பிற்சேரேனோபார்மீதிரங்குநேரேனே. 1
எளியேனென்னவிருப்பாரோவேழைக்கிரங்கும்
வளியேன்பேர்நெஞ்சிருப்பாரோவழியாக்காமந்திருப்பாரோ
களியேனென்னவுருப்பாரோகருதுமருட்குக்கருப்பாரோ [ரோ
தெளியேன்யானென்செய்கேனேதென்பாற்றணிகைப்பொருப்பா

செய்கொடணிகைநாடேனோசெவ்வேள்புகழைப்பாடேனோ
கைகள்கூப்பியாடேனோகருணைக்கடலினீடேனோ
மெய்கொள்புளகமூனேனோமெய்யன்பர்கள்பாற்கூடேனோ
பொய்கொளுலகோடேடேனோபுவிமீதிருகான்மாடேனே. 3

வந்தென்னெதிரினில்லாரோமகிழவொருசொல்சொல்லாரோ
முந்தம்மதனைவெல்லாரோமோகந்திரப்புல்லாரோ
கந்தனெனும்பேரல்லாரோகருணைநெஞ்சங்கல்லாரோ
சந்தத்தணிகையில்லாரோசகத்திலெல்லாம்வல்லாரோ. 4

நாட்டுந்தணிகைநண்ணேனோநாதன்புகழையெண்ணேனோ
கூட்டுந்தொழும்புபண்ணேனோகுறையாவருணீருண்ணேனோ
சூட்டுமயக்கைமண்ணேனோதொழும்பரிடத்தையண்ணேனோ
காட்டுமவர்தாள்கண்ணேனோகழியாவாழ்க்கைப்புண்ணேனே 5

காமப்பயலைத்தடுப்பாரோகடப்பமலர்த்தார்கொடுப்பாரோ
வேமத்தனத்தைக்கடுப்பாரோவென்மேலன்பைவிடுப்பாரோ
மாமற்றொருவீடடுப்பாரோமனதிற்கோபந்தொடுப்பாரோ
தாமத்தாழ்வைக்கொடுப்பாரோதணிகைதனில்வேலெடுப்பாரே 6

காவிமலைக்கண்வதியேனோகண்ணுண்மணியைத்துதியேனோ
பாவிமயலைமிதியேனோபரமானந்தத்ததியேனோ
வோவிலருளைப்பதியேனோவுயர்ந்ததொழும்பிற்கதியேனோ
தாவில்சுகத்தைமதியேனோசற்றுபயனில்லொதியேனே. 7

வருந்துந்தனிமுன்மன்னாரோவருத்தமுனக்கேனென்னாரோ
விருந்தென்னிடத்தேதுன்னாரோவிணைத்தாளீயவுன்னாரோ
பொருந்திங்கயலாரன்னாரோபொருணீதென்றுபன்னாரோ
செருந்திமலருந்திருத்தணிகைத்தேவரெவர்க்குமுன்னாரே. 8

தணிகாசலம்போய்த்தழையேனோசாமிதிருத்தாள்விழையேனோ
பணிகாதலித்துப்பிழையேனோபாடிமனதுகுழையேனோ
திணிகாணுலகையழையேனோசேர்ந்தவ்வீட்டுனுழையேனோ
பிணிகாணுலகிற்பிறந்துழன்றேபேதுற்றலையும்பழையேனே 9

மன்னுங்குவளைமீயாரோமதவேண்மதத்தைக்காயாரோ
வின்னுங்கோபமோயாரோவென்றுயர்தனக்குத்தாயாரோ
துன்னுமிரக்கந்தோயாரோதுகளேன்றுயரையாயாரோ
பன்னுவளங்கள்செறிந்தோங்கும்பணைகொடணிகைத்தூயாரே. 10

திருச்சிற்றம்பலம்.

போற்றித் திருவிருத்தம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கங்கையஞ்சடைசேர்முக்கட்கரும்பருண்மணியேபோற்றி
யங்கையங்கனிபோற்றியருட்பெருங்கடலேபோற்றி
பங்கையன்முதலோர்போற்றும்பரம்பரஞ்சுடரேபோற்றி
சங்கைதீர்த்தருளுந்தெய்வச்சரவணபவனேபோற்றி. 1

பனிப்பறவருளுமுக்கட்பரஞ்சுடரொளியேபோற்றி
யினிப்புறுகருணைவான்றேனெனக்கருள்புரிந்தோய்போற்றி
துனிப்பெரும்பவந்தீர்த்தென்னைச்சுகம்பெறவைத்தோய்போற்றி
தனிப்பெருந்தவமேபோற்றிசண்முகத்தரசேபோற்றி. 2

மணப்புதுமலரேதெய்வவான்சுவைக்கனியேபோற்றி
தணப்பறவடியர்க்கின்பந்தருமொருதருவேபோற்றி
கணப்பெருந்தலைவரேத்துங்கழற்பதத்தரசேபோற்றி
குணப்பெருங்குன்றேபோற்றிகுமரசற்குருவேபோற்றி. 3

தவம்பெறுமுனிவருள்ளத்தாமரையமர்ந்தோய்போற்றி
பவம்பெறுஞ்சிறியேன்றன்னைப்பாதுகாத்தளித்தோய்போற்றி
நவம்பெறுநிலைக்குமேலாநண்ணியநலமேபோற்றி
சிவம்பெறும்பயனேபோற்றிசெங்கதிர்வேலோய்போற்றி. 4

மூவடிவாகிநின்றமுழுமுதற்பரமேபோற்றி
மாவடியமர்ந்தமுக்கண்மலைதருமணியேபோற்றி
சேவடிவழுத்துந்தொண்டர்சிறுமைதீர்த்தருள்வோய்போற்றி
தூவடிவேல்கைக்கொண்டசுந்தரவடிவேபோற்றி. 5

விண்ணுறுசுடரேயென்னுள்விளங்கியவிளக்கேபோற்றி
கண்ணுறுமணியேயென்னைக்கலந்தநற்களிப்பேபோற்றி
பண்ணுறுபயனேயென்னைப்பணிவித்தமணியேபோற்றி
எண்ணுறுமடியார்தங்கட்கினியதெள்ளமுதேபோற்றி. 6

மறையெலாம்பரவநின்றமாணிக்கமலையேபோற்றி
சிறையெலாந்தவிர்ந்துவானோர்திருவுறச்செய்தோய்போற்றி
குறையெலாமறுத்தேயின்பங்கொடுத்தவென்குருவேபோற்றி
துறையெலாம்விளங்குஞானச்சோதியேபோற்றிபோற்றி. 7

தாருகப்பதகன்றன்னைத்தடிந்தருள்செய்தோய்போற்றி
வேருகச்சூரயாவைவீட்டியவேலோய்போற்றி
யாருகச்சமயக்காட்டையழித்தவெங்கனலேபோற்றி
போருகத்தகரையூர்ந்தபுண்ணியமூர்த்திபோற்றி. 8

சிங்கமாமுகனைக்கொன்றதிறலுடைச்சிம்புள்போற்றி
துங்கவாரணத்தோன்கொண்டதுயர்தவிர்த்தளித்தோய்போற்றி
செங்கண்மான்மருகபோற்றிசிவபிரான்செல்வபோற்றி
யெங்களாரமுதேபோற்றியாவர்க்குமிறைவபோற்றி. 9

முத்தியின்முதல்வபோற்றிமூவிருமுகத்தபோற்றி
சத்திவேற்கரத்தபோற்றிசங்கரிபுதல்வபோற்றி
சித்திதந்தருளுந்தேவர்சிகாமணிபோற்றிபோற்றி
பத்தியின்விளைந்தவின்பப்பரம்பரபோற்றிபோற்றி. 10

தெருளுடையோர்க்குவாய்த்தசிவானந்தத்தேனேபோற்றி
பொருளுடைமறையோருள்ளம்புகுந்தபுண்ணியமேபோற்றி
மருளுடைமனத்தினேனைவாழ்வித்தவாழ்வேபோற்றி
யருளுடையரசேயெங்களறுமுகத்தமுதேபோற்றி. 11

பொய்யினேன்பிழைகளெல்லாம்பொறுத்திடல்வேண்டும்போற்றி
கையனேன்றன்னையின்னுங்காத்திடல்வேண்டும்போற்றி
மெய்யனேமெய்யருள்ளமேவியவிளைவேபோற்றி
ஐயனேயப்பனேயெம்மரசனேபோற்றிபோற்றி. 12

முருகநின்பாதம்போற்றிமுளரியங்கண்ணற்கன்பா
மருகநின்கழல்கள்போற்றிவானவர்முதல்வபோற்றி
பெருகருள்வாரிபோற்றிபெருங்குணப்பொருப்பேபோற்றி
தருகநின்கருணைபோற்றிசாமிநின்னடிகள்போற்றி 13

கோதிலாக்குணத்தோய்போற்றிகுகேசநின்பாதம்போற்றி
தீதிலாச்சிந்தைமேவுசிவபரஞ்சோதிபோற்றி
போதினன்முகனுங்கா ப்பூரணவடிவபோற்றி
யாதிநின்றாள்கள்போற்றியநாதிநின்னடிகள்போற்றி. 14

வேதமுங்கலைகள்யாவும்விளம்பியபுலவபோற்றி
நாதமுங்கடந்துநின்றநாதநின்கருணைபோற்றி
போதமும்பொருளுமாகும்புனிதநின்பாதம்போற்றி
யாதரமாகியென்னுளமர்ந்தவென்னரசேபோற்றி. 15

திருச்சிற்றம்பலம்,

குறைநேர்ந்தபத்து.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வான்பிறந்தார்புகழ்தணிகைமலையைக்கண்டு
  வள்ளலேநின்புகழைமகிழ்ந்துகூறேன்
றேன்பிறந்தமலர்க்குழலார்க்காளாவாளா
  திரிகின்றேன்புரிகின்றேன்றீமைநாளு
மூன்பிறந்தவுடலோம்பியவமேவாழ்நாளொழிக்கின்றேன்
  பழிக்காளாயுற்றேனந்தோ
யேன்பிறந்தேனேன்பிறந்தேன்பாவியேன்யா
  னென்குறையையெவர்க்கெடுத்திங்கியம்புகேனே. 1

மெய்யாவோநற்றணிகைமலையைச்சார்ந்து
  மேன்மையுறுநின்புகழைவிரும்பியேத்தே
னுய்யாவோவன்னறியேன்பயன்படாத
  வோதியனையேனெட்டிதனையொத்தேனன்பர்
பொய்யாவோடனமடவார்போகம்வேட்டேன்
  புலையனேன்சற்றேனும்புனிதமில்லே
னையாவோநாணுமற்பாவியேன்யான்
  யார்க்கெடுத்தென்குறைதன்னையறைகுவேனே. 2

வாட்செல்லாநெடுகண்ணார்மயலில்வீழ்ந்து
  மனம்போனவழிசென்றுவருந்தாநின்றேன்
சேட்செல்லார்வரத்தணிகைத்தேவதேவே
  சிவபெருமான்பெற்றபெருஞ்செல்வமேநா
ளுட்செல்லாநின்றதினியென்செய்கேனே
  நாயினேன்பிழைதன்னைநாடிநின்பாற்
கோட்செல்லாநிற்பரெனிலென்னாமோவென்
  குறையையெடுத்தெவர்க்கெளியேன்கூறுவேனே. 3

பொல்லாதமங்கையர்தமயற்குள்ளாகும்
  புலையமனத்தால்வாடிப்புலம்புகின்றேன்
கல்லாதபாவியென்றுகைவிட்டாயோ
  கருணையுருவாகியசெங்கரும்பேமேரு

வில்லான்றன்செல்வமேதணிகைமேவு
மெய்ஞ்ஞானவொளியேயிவ்வினையேன்றுன்ப
மெல்லாநீயறிவாயேயறிந்தும்வாரா
திருந்தாலென்குறையையெவர்க்கியம்புகேனே. 4

முன்னறியேன்பின்னறியேன்மாதர்பாலென்
மூடமனமிழுத்தோடப்பின்சென்றெய்த்தேன்
வுன்னெறியேன்பொய்யரொடும்பயின்றேனின்றன்
புனிதவருட்கடலாடேன்புளகமூடேன்
பொன்னரையன்றொழுஞ்சடிலப்புனிதனீன்ற
புண்ணியமேதணிகைவளர்போதவாழ்வே
யென்னரைசேயென்னமுதேநின்பாலன்றி
யெவர்க்கெடுத்தென்குறைதன்னையியம்புகேனே. 5

விடுமாட்டிற்றிரிந்துமடமாதரார்தம்
வெய்யநீர்க்குழிவீழ்ந்துமீளாநெஞ்சத்
தடுமாற்றத்தொடும்புலையவுடலையோம்பிச்
சார்ந்தவர்க்கோரணுவளவுந்தானீயாது
படுகாட்டிற்பலனுதவாப்பனைபோனின்றேன்
பாவியேனுடற்சுமையைப்பலருங்கூடி
யிடுகாட்டில்வைக்குங்காலென்செய்வேனோ
வென்குறையையெவர்க்கெடுத்திங்கியம்புகேனே. 6

மின்னேரிடைமடவார்மயல்செய்கின்ற
வெங்குழியில்வீழ்ந்தழுந்திவெறுத்தேன்போலப்
பின்னையேயெழுந்தெழுந்துமீட்டுமீட்டும்
பேய்போலவீழ்ந்தாடிமயற்குண்மூழ்கிப்
பொன்னையேயொத்தவுனதருளைவேண்டிப்
போற்றுதவீணேநாட்போக்குகின்ற
வென்னையேயான்சிரிப்பேனுகிலந்தோ
வென்குறையையெவர்க்கெடுத்திங்கியம்புகேனே 7

மூலையொருபான்முகமொருபால்காட்டும்பொல்லா
மூடமடவார்கடமைமுயங்கிநின்றே
னிலையொருபாலனமொருபான்மலைஞ்சேர்த்துன்னு
மேழைமதியேன்றணிகையேந்தலேபொன்

மலையொருபால்வாங்கியசெவ்வண்ணமேனி
வள்ளறருமருந்தேநின்மலர்த்தாளேத்தேன்
புலையொருவாவஞ்சகநெஞ்சடையேனென்றன்
புன்மைதனையெவர்க்கெடுத்துப்புகலுவேனே. 8

வேய்ப்பான்மென்றோண்மடவார்மறைக்குமாய
வெம்புழுச்சேர்வெடிப்பினிடைவீழ்ந்துநின்றேன்
றாய்ப்பாலையுண்ணாதுநாய்ப்பாலுண்ணுந்
தகையனேன்றிருத்தணிகைதன்னைச்சார்ந்து
யாய்ப்பாலையொருமருங்கானின்றசெல்வத்
தாரமுதேநின்னருளையடையேன்கண்டா
யேய்ப்பாலைநடுங்கருங்கல்போனின்றெய்த்தே
னென்குறையையெவர்க்கெடுத்திங்கியம்புகேனே. 9

வஞ்சமடமாதரார்போகமென்னு
மலத்தினிடைக்கிருமியெனவாளாவீழ்ந்தேன்
கஞ்சமலர்மனையானுமாலுந்தேடக்
காணாதசெங்கனியிற்கனிந்ததேனே
தஞ்சமென்போர்க்கருள்புரியும்வள்ளலேநற்
றணிகையரசேயுனதுதாளைப்போற்றே
னெஞ்சலிலாவினைச்சேமவிடமாயுற்றே
னென்குறையையெவர்க்கெடுத்திங்கியம்புகேனே. 10

திருச்சிற்றம்பலம்.

ஜீவசாக்ஷிமாலை.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணேறுமொழியடியர்பரவிவாழ்த்தும்
பாதமலரழகினையிப்பாவிபார்க்கிற்
கண்ணேறுபடுமென்றோகனவிலேனுங்
காட்டென்றாற்காட்டுகிலாய்கருணையீதோ
விண்ணேறுமரிமுதலோர்க்கரியஞான
விளக்கேயென்கண்ணேமெய்வீட்டின்வித்தே
தண்ணேறுபொழிற்றணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 1

பண்டுமனதுவந்துகுணஞ்சிறிதுமில்லாப்
பாவியேன்றனையாண்டாய்பரிவாலின்று
தொண்டுகுலம்பேசுதல்போலெளியேன்குற்றங்
குறித்துவிடிலென்செய்கேன்கொடியனேனைக்
கண்டுதிருத்தொண்டர்நகைசெய்வாரெந்தாய்
கைவிடேலுன்றுணைகாண்மூக்காலும்
தண்டுளவன்புகழ்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 2

புன்புலையவஞ்சகர்பாற்சென்றுவீணே
புகழ்ந்துமனமயர்ந்துழலுகண்பொருந்திப்பொய்யாம்
வன்புலையவயிறோம்பிப்பிறவிநோய்க்கு
மருந்தாயநின்னடியைமறந்தேனந்தோ
வின்புலையவுயிர்கொள்வான்வரிலென்பாலவ்
வியமனுக்கிங்கென்சொல்கேனென்செய்கேனே
தன்புகழ்காணருந்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 3

பெருங்களபமுலைமடவாரென்னும்பொல்லாப்
பேய்க்கோட்பட்டாடுகின்றபித்தனேனுக்
கிரும்புலவர்க்கரியதிருவருளீவாயே
லென்சொல்வாரடியதற்கெந்தாயெந்தாய்
கரும்பினிழிந்தொழுகுமருட்சுவையேமுக்கட்
கனிகனிந்ததேனேயென்கண்ணேஞானந்
தரும்புனிதர்புகழ்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 4

கல்லளவாநெஞ்சமெனவஞ்சமாதர்
கண்மாயமெனுங்கயிற்றாற்கட்டுவித்துச்
சொல்லளவாத்துன்பமெனுங்கடலில்வீழ்த்தச்
சோர்கின்றேனந்தோநற்றுணையொன்றில்லேன்
மல்லலவாய்ப்பவமாய்க்குமருந்தாமுன்றன்
மலர்ப்பாதப்புணைதந்தால்மயங்கேனெந்தாய்
* சல்லமுலாத்தருந்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 5

---

* சல்லம் எ - து பன்றிக்கோடு.

அன்னைமுதலாம்பந்தத்தழுங்கிஞாளு
மலைந்துவயிறேம்பிமனமயர்ந்துநாயேன்
முன்னைவினையாற்படும்பாடெல்லாஞ்சொல்லி
முடியேன்செய்பிழைகருதிமுனியேலையா
பொன்னைநிகரருட்குன்றேயொன்றேமுக்கட்
பூமணமேமாறவேகற்புலவர்போற்றத்
தன்னைநிகர்தருந்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 6

பன்னரும்வன்றுயராலெஞ்சழிந்துநாளும்
பதைத்துருகிநின்னருட்பால்பருகக்கிட்டா
துன்னரும்பொய்வாழ்க்கையெனுங்கானத்திந்த
வூர்நகைக்கப்பாவியழலுணர்ந்திலாயோ
வென்னருமையப்பாவென்னையாவென்ற
னின்னுயிர்க்குத்தலைவாவிங்கெவர்க்குந்தேவா
தன்னியர்சீர்வளர்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 7

கோவேநின்பதந்துதியாவஞ்சநெஞ்சக்
கொடியோர்பான்மனவருத்தங்கொண்டாழ்கின்றேன்
சாவேனுமல்லனின்பொன்னருளைக்காணேன்
றமியேனையுப்பும்வண்ணந்தருவதென்றோ
சேவேறுஞ்சிவபெருமானரிதினீன்ற
செல்வமேயருண்ஞானத்தேனேயன்பர்
தாவேதந்தெறுந்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 8

ஓயாதுவருமிடியான்வஞ்சர்பாற்சென்
றுளங்கலங்கிநாணியிரந்துழன்றெந்நாளும்
மாயாததுயரடைந்துவருந்தித்தெய்வ
மருந்தாயநின்னடியைமறந்திட்டேனே
தாயாகித்தந்தையாய்த்தமராய்ஞான
சற்குருவாய்த்தேவாகித்தழைத்தவொன்றே
சாயாதபுகழ்த்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 9

மின்னுமிடைமடவாரல்குலாய
வெங்குழியில்வீழ்ந்தாழ்ந்துமெலிந்தேனெல்லா
லெங்காலுமுனைப்போற்றியறியேனென்னே
யேழைமதிகொண்டேனிங்கென்செய்கேனே
யன்னையென்னப்பாவென்றரற்றுமன்பர்க்
காரமுதேயருட்கடலேயமரர்கோவே
தன்னார்வத்தமர்தணிகைமணியேஜீவ
சாக்ஷியாய்நிறைந்தருளுஞ்சகசவாழ்வே. 10

திருச்சிற்றம்பலம்.

கந்தர்சரணப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

அருளாரமுதேசரணஞ்சரணம்அழகாவமலாசரணஞ்சரணம்
பொருளாவெனையாள்புனிதாசரணம்பொன்னேமணியேசரணம்
மருள்வார்க்கரியாய்சரணஞ்சரணம்மயில்வாகனனேசரணஞ்சரண
கருணாலயனேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 1

பண்ணேர்மறையின்பயனேசரணம்பதியேபரமேசரணஞ்சரணம்
விண்ணேரொளியேவெளியேசரணம்வெளியின்விளைவேசரணம்
உண்ணேருயிரேயுணர்வேசரணம்உருவேயருவேயுருவேசரணம்
கண்ணேமணியேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 2

முடியாமுதலேசரணஞ்சரணம்முருகாகுமராசரணஞ்சரணம்
வடிவேலரசேசரணஞ்சரணம்மயிலூர்மணியேசரணஞ்சரணம்
அடியார்க்கெளியாய்சரணஞ்சரணம்அரியாய்பெரியாய்சரணஞ்சர
கடியாக்கதியேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 3

பூவேமணமேசரணஞ்சரணம்பொருளேயருளேசரணஞ்சரணங்
கோவேகுகனேசரணஞ்சரணங்குருவேதிருவேசரணஞ்சரணந்
தேவேதெளிவேசரணஞ்சரணஞ்சிவசண்முகனேசரணஞ்சரணங்
காவேர்தருவேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 4

கடவுந்தனிமாமயிலோய்சரணம்நல்லார்புகழும்வல்லோய்சரணந்
திடமுந்திருவுந்தருவோய்சரணந்தேவர்க்கரியாய்சரணஞ்சரணந்
தடவண்புயனேசரணஞ்சரணந்தனிமாமுதலேசரணஞ்சரணங்
கடவுண்மணியேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம் 5

கோலக்குறமான்கணவாசரணங்குலமாமணியேசரணஞ்சரணஞ்
சீலத்தவருக்கருள்வோய்சரணஞ்சிவனார்புதல்வாசரணஞ்சரணம்
ஞாலத்துயர்தீர்நலனேசரணம்நடுவாகியநல்லொளியேசரணங்
காலற்றெறுவோய்சரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 6

நங்கட்கினியாய்சரணஞ்சரணம்நந்தாவுயர்சம்பந்தாசரணந்
திங்கட்சடையான்மகனேசரணஞ்சிலைதந்தருளும்புதல்வாசரணந்
துங்கச்சுகனன்றருள்வோய்சரணஞ்சுரர்வாழ்த்திடுநந்துரையேசர
கங்கைக்கொருமாமதலாய்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம் 7

ஒளியுள்ளொளியேசரணஞ்சரணம்ஒன்றேபலவேசரணஞ்சரணந்
தெளியுந்தெருளேசரணஞ்சரணஞ்சிவமேதவமேசரணஞ்சரணம்
அளியுங்கனியேசரணஞ்சரணம்அமுதேயறிவேசரணஞ்சரணங்
களியொன்றருள்வோய்சரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணம். 8

மன்னேயெனையாள்வரதாசரணம்மதியேயடியேன்வாழ்வேசரணம்
பொன்னேபுனிதாசரணஞ்சரணம்புகழ்வாரிதயம்புகுவாய்சரணம்
அன்னேவடிவேலரசேசரணம்அறுமாமுகனேசரணஞ்சரணங்
கன்னேர்புயனேசரணஞ்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம். 9

வேதப்பொருளேசரணஞ்சரணம்விண்ணோர்பெருமான்சரணஞ்சர
போதத்திறனேசரணஞ்சரணம்புனைமாமயிலோய்சரணஞ்சரணம்
நாதத்தொலியேசரணஞ்சரணம்நவையில்லவனேசரணஞ்சரணங்
காதுக்கினிதாம்புகழோய்சரணங்கந்தாசரணஞ்சரணஞ்சரணம் 10

திருச்சிற்றம்பலம்,

உ

கடவுள் துணை.

திருத்தணிகை

முருகக்கடவுள் பேரில்

மாதப் பதிகம்

வெண்பா.

தணிகா சலமேவுந் தற்பரனை வேண்டித்
துணிவா யிருபதிகஞ் சொல்ல—மணிசேர்
பணிதுலங்கு தோளான் பகரானை மாமுகன்ற
ளணியாய் தலைக்கணிகு வாம்.

சித்திரைமாதம்.

அத்திமுகத்தோ னருந்துணைவாவிவ் வகிலமெல்லாஞ்
சுத்தியொருநொடிக் குள்ளேவலஞ்செய்த சூத்திரனே
முத்தமிழ்க்கீர னிடர்தீர்க்கத்தட்சண முயன்றதுபோல்
சித்திரைமாதம் வருவாய்தணிகையிற் சேவகனே.

வைகாசிமாதம்.

கையாறநின்கழல் போற்றிசெய்தேனென் கனவிலெல்லாம்
மெய்யாகநீவந்த துண்மையென்றுவிந்த மேதினியில்
செய்யாவினையென்ன செய்திருந்தாலுமச் சீற்றமற்று
வையாசிமாதம் வருவாய்த்தணிகையில் வாழ்பவனே.

ஆனிமாதம்.

மானிலமளந்த மான்மருகாயிந்த மானிலமும்
ஞானிபுமுனிவரும் நான்முகனுந்தொழு நாயகனே
தேனில்விழுந்த யீப்போல்திகைத்துனைத் தேடுகின்றேன்
ஆனிமாதத்தில் வருவாய்தணிகையி லாண்டவனே.

ஆடிமாதம்.

ஓடியுலாவும் பருவத்திலேயிந்த வூழ்வினைதா
னடித்தடர்ந்து தையோயிதற்கென்ன நானறிவேன்
பாடித்துதிக்கும் பதங்கொடுத்தாயந்தப் பக்குவம்போல்
ஆடிமாதத்தில் வருவாய்தணிகையி லாண்டவனே.

ஆவணி மாதம்

சேவலங்கொடியுடைச் சேவகனேதுதி செய்பவர்க்குங்
காவடிக்கொண்டு வருமடியார்க்குங் கருணைவைத்து
மாவினையாவையுந் தீர்க்கவென்றேமலை மேவிநின்றாய்
ஆவணிமாதம் வருவாய்தணிகையி லானந்தனே.

புரட்டாசிமாதம்.

இருட்டானமேனி யசுரரைச்சாய்த்து யிமையவர்மேல்
அருட்பார்வைநோக்கிய யாண்டவனேயடி யேனைவினை
வெருட்டாமல்காக்க வேண்டுகின்றேன்வெற்றி மாமயில்மேல்
புரட்டாசிமாதம் வருவாய்தணிகையிற் புண்ணியனே.

அற்பிசி மாதம்.

கப்பியவூழ்வினைத் தீர்ப்பையென்றேநின் கமலமதில்
ஒப்புவித்தேன்மனத் துள்ளதெல்லாமிகு வுத்தமனே
தப்பிதமெத்தனை செய்திருந்தாலுநின் தஞ்சமென்றேன்
ஐப்பிசிமாதம் வருவாய்தணிகையி லற்புதனே.

கார்த்திகைமாதம்.

தீர்த்தமனேகங்கள் மூழ்கிவந்தேன்வினை தீர்ந்திலையால்
மூர்த்திகண்மூவர் முதல்வனுக்கேமறை முடிவுரைத்து
கீர்த்திவகித்த சண்முகனேகதி வேறறியேன்
கார்த்திகைமாதம் வருவாய்தணிகையிற் காவலனே.

மார்கழிமாதம்.

சீர்மலிந்தோங்கு முலகமெல்லாம்நின் சேவடிக்கே
கார்மலிந்தோங்கு வண்ணமன்றோயின்பக் கட்டுரையால்
ஏர்மலிந்தோங்கு கவிவாணரன்பர்சொல் லேற்றதுபோல்
மார்கழிமாதம் வருவாய்தணிகையில் மன்னவனே.

தைமாதம்.

பொய்யானவாழ்க்கையை மெய்யாகநம்பியிப் பூதலத்தில்
மையாடுகண்ணியர் மயலால்மெலிந்து மயங்குகின்றே
னையாவுனையன்றி திக்கறியேன்வினை யார்தவிர்ப்பார்
தைமாதந்தன்னில் வருவாய்தணிகைத் தயாபரனே.

மாசிமாதம்.

பூசித்திறைஞ்சு மடியாரிருதயம் பூரிக்கவன்பு
நேசித்துவந்து வினையுங்கவலையும் நீக்குகின்ற
தேசிகனேதெய்வ நாயகனேயுனைத் தேடுகின்றேன்
மாசிமாதத்தில் வருவாய்தணிகையில் மாமணியே.

பங்குனிமாதம்.

எங்கெங்குமோடியும் வினையகலாமலென் னிருதயத்தை
பங்கிட்டுனின்மலர் பதத்தில்வைத்தேனிது பத்தியமாம்
மங்களவள்ளியுந் தெய்வானையோடு மனமகிழ்ந்து
பங்குனிமாதம் வருவாய்தணிகையிற் பண்ணவனே.

மாதப்பதிகம் முற்றியது.

வாரப் பதிகம்.

ஆதிவாரம்.

நீதிக்கிசைந்த தெய்வமென்றேயிந்த நீணிலத்தோர்
ஓதித்துதிக்கு முண்மையினாலெந்த னூழ்வினையைச்
சோதித்துநீக்கிச் சுகத்தைக்கொடுக்கநற் றோகையுடன்
ஆதித்தவாரம் வருவாய்தணிகையி லாண்டவனே.

சோமவாரம்.

பொங்குகடல்சூ ழுலகமெல்லாமுன்னைப் போற்றுதலால்
அங்கந்தளர்ந்துமிக மெலிந்தடிபேணுவக் கபயமென்றேன்
எங்குந்திரிந்து உழலாமலென்முறை யேற்றருளித்
திங்கட்கிழமை வருவாய்தணிகையிற் றேசிகனே.

மங்களவாரம்.

ஒவ்வாதவாசைப் பெருவாரியில்நெஞ்சு வூஞ்சலிட்டால்
எவ்வாறுநல்ல நிலையினிற்சேனென்ன வூழ்வினையோ
இவ்வாறுயென்னை யயலாய்நினைக்கிலிங் காருதுணை
செவ்வாய்க்கிழமை வருவாய்தணிகையிற்சேவகனே.

புதவாரம்.

இதமாகநெஞ்சுக் கெத்தனைச்சொன்னாலு மிவ்வுலகை
சதமாகவேநம்பி வாதிக்குதேயிந்த சஞ்சலத்தை
பதமாகநீக்கி நினையேதொழப்பச்சை மாமயில்மேல்
புதவாரந்தன்னில் வருவாய்தணிகையிற் புண்ணியனே.

குருவாரம்.

ஒருவருந்துணையில்லை யில்லையென்றேயுந்த னுயர்பதத்தை
மருவிப்பிடித்து மன்றாடுவேன்மன மேனிரங்காய்
அருமாமறைக்கு ஆதியனேயெனை யாதரிக்கக்
குருவாரந்தன்னில் வருவாய்தணிகைக் கொற்றவனே.

சுக்கிரவாரம்.

கள்ளமனத்தின் கவலையுந்தேகக் கடுவினையும்
எள்ளத்தனையு மில்லாமற்காக்க யிதுசமயம்
வள்ளிப்புனத்தில் வெகுவித்தைசெய்த வாலிபன்நீ
வெள்ளிக்கிழமையில் வருவாய்தணிகையில் வேலவனே.

சனிவாரம்.

அனியாயநவக்கிர கச்சேட்டையினால்நொந் தடுக்குலைந்தேன்
முனியாமலென்முறைக் கேட்டருள்வாய்குரு மூர்த்தியனே
இனியேதெமக்குக் குறையென்னவென்றிரு மாந்திருக்கச்
சனிவாரந்தன்னில் வருவாய்தணிகையிற் சண்முகனே.

பன்னிருமாதமும் வாரங்களேழும் பகலிரவும்
உன்னிருதாட்டொழுங் கடமையுள்ளேனிது வுண்மைகண்டாய்
என்னிருதயத்துக் கவலையுமுழு மெடுத்தெறிந்து
முன்னின்றுகார்க்குங் கடனெந்தகாலமு முன்னதுவே.

வாரப்பதிகம் முற்றிற்று.

ஸ்ரீ பண்டரிநாத னருள்பெற்று முக்தியடைந்தவர்களி லொருவராகிய

கோராகும்பார்

இது ஓர் பக்திநிறைந்த சரித்திரம். விலை அணா 4

ஸ்ரீகோராகும்பார் தன்ஜாதித்தொழிலாகிய பாத்திரங்கள் செய்ய மண்மிதித்துக் கொண்டே பண்டரிநாதனை நினைத்து யோகநிஷ்டையி லிருப்பதும் தன்குழந்தையானது ஜலம்கொண்டுவர வெளியேசென்ற தன் தாயைக்காணாது தன்தந்தையை யடைந்து காலைப்பிடித்துக்கொள் வதும், இதையறியாது பக்தர் மண்ணுடன்சேர்த்து குழந்தையை மிதித்து விடுவதும், தாய் குழந்தையைக்காணாது தேடி பிறகு மண்ணுடன் மிதி யுண்டு நசுங்கிக்கிடப்பதைக்கண்டு புலம்புவதும் அதனால் பக்தர் நிஷ்டை கலைந்துவிட்டதென்று கோபங்கொண்டு தன்மனைவியை அடிக்கச்செல்வ தும் அதைக்கண்ட மாது பயந்து தன்னை தொடலாகாதென்று ஆணையிடு வதும், பக்தர் தானும் மனைவியை எந்தகாலத்தும் தொடுவதில்லையென்று சபதம்செய்வதும் அதனால் மாது தன் சந்ததிவிளங்க தன்தங்கையை விவாகம்செய்விப்பதும், தன் மாமனார் வழிகூட்டி அனுப்பும்போது தன் இரண்டு குமாரத்திகளையும் ஒரேமாதிரி பார்க்கும்படியாய் ஆணையிடுவ தும் பக்தர் அதனால் சிறிய மனைவியையும் தொடலாகா தென்று தென்று நினைத்து தன்காரியத்திலேயே யிருப்பதும் ஓர்நாளிரவு நித்திரை செய்யும்போது இருமனைவிகளும் ஆசையால் அவர்கரங்களை தங்கள் மார் மீதுவைத்து உறங்கும்போது பக்தர் விழித்துப்பார்த்து தன்கரங்கள் மாத ர்கள்மேல் பட்டதைக்கண்டு தன் சபதத்திற்கு பங்கம் வந்ததால் உடனே தன்கையை இரண்டுதுண்டாய் வெட்டிக்கொள்வதும் இதைக்கண்டு மா தர்கள் வருத்தமடைந்து அவரையழைத்துக்கொண்டு பகவான் சந்நதிய டைவதும் அவிடம் பக்தர்கள் கரதாளம்போட்டு பஜிப்பதைப்பார்த்து தா னும் கரதாளம்போடுவதற்கு கையில்லையேயென்று வருந்தும்போது பண் டரிநாதனருளால் கைவளர்வதும், இதைக்கண்ட மாதர்கள் கண்டு மகிழ்வ டைந்து பிறகு தன்குழந்தையையும் பகவானிடம் உயிருடன் அடைவதும் ஆகிய இவைகளை கீர்த்தனைகளாகவும் வசனங்களாகவும் நல்ல நடையில் எழுதி எல்லாபக்தர்களும் வாசித்து சந்தோஷமடையும்படியாய் அச்சி டப்பட் டிருக்கிறது. வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிபெற்றுக்கொள்ளலாம்.

ம-ா-ா-ஸ்ரீ, வித்வான், ஏகை-சிவசண்முகம்பிள்ளை அவர்களா

லியற்றிய

அகலிகை அல்லது இந்திரபங்கம் விலை அணா 4.

எமது விலாசம்—மயிலை-கன்னியப்ப முதலியார்.

புஸ்தக வியாபாரம்.

43-கிழவசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை,

மவண்ட்ரோட் போஸ்ட் சென்னை.